بسم الله الرحمن الرحيم

# Friday Sermon 31/07/2015

**(14 SHAWWAL 1436 HIJRI)**

# RIGHTEOUSNESS & SUBMISSION TO ALLAH
# பக்தியும், அல்லாஹ்வுக்கு கீழ்ப்பணிதலும்

**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திய பிறகு தஷஹ்ஹுதும் தஅவுசும் அல் பாத்திஹாவும் ஓதிக் கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ)** அவர்கள் கீழ்காணுமாறு உரையாற்றினார்.

யார் ஒரு உண்மையான மு.ஃ.ம்மின்? எவ்வாறு ஒரு நல்ல முஸ்லீமாக மாற முடியும்? திரு குர் ஆனின் பல்வகைப்பட்ட வசனங்கள் வாயிலாக அல்லாஹ் இவ்வகை கேள்விகளுக்கு பதிலளித்துள்ளான். தூய ரசூல் (ஸல்) வின் திரு மொழிகளிலும் இதற்கான பதில்கள் காணலாம். பரிசுத்த குர் ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

**“புண்ணியம் என்பது உங்கள் முகங்களை கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக் கொள்வதில் இல்லை. ஆனால் புண்ணியம் என்பது அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் வேதத்தின் மீதும் நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுதல், பொருளை இறைவன் மேலுள்ள நேசத்தின் காரணமாக பந்துக்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளின் மீட்புக்காகவும் செலவு செய்தல் இன்னும் தொழுகையை ஒழுங்காகக் கடைப்பிடித்து முறையாக ஜகாத் கொடுத்து வருதல் இன்னும் வாக்களித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும் துன்பத்திலும் கஷ்டத்திலும் யுத்த சமயத்திலும் உறுதியுடனும் பொறுமையுடனும் இருப்போரும் தான் நன்னெறியாளர்கள், இன்னும் அவர்கள் தாம் முத்தகீன்கள்”. (2-178)**

பக்தி என்பது இதயத்திலிருந்து முளைத்துக் கொள்ள வேண்டும். பூமியில் தனது ஆண்களும் பெண்களுமான அடியார்களுக்காக விடுத்துள்ள கட்டளைகளையாவும் கடைப்படித்துக் கொண்டு, இதயத்தின் தூய்மை வழியாக அதைப் பிரகடனப்படுத்திக் கொள்வதை தக்வா அல்லது பக்தி என கூறலாம். ஆண்கள் ஆகட்டும், பெண்கள் ஆகட்டும், இளைஞர்கள் ஆகட்டும், முதுமையடைத்தோர்கள் ஆகட்டும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ்விடம் கடமையிருக்கின்றது. இக்கடமைகள் அவர்கள் நிறைவேற்றிக் கொள்ள

வேண்டும். அந்நேரம் அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான அடியார்களாக பரிணமித்துக் கொள்வர்கள்.

தூய தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக காணலாம்.

**நம்பிக்கையாளர்களின் நிலை எவ்வளவு அற்புதம் வாய்ந்ததாகும். அவர்களின் விஷயங்கள்யாவும் நன்கேயாகும். அவர்களுக்கு ஏதேனும் நன்மை நிகழ்ந்தால் அதற்கு அவர்கள் நன்றி செலுத்துகின்றனர். அது அவர்களுக்கு நன்கேயாகும். மேலும் அவர்களுக்கு ஏதேனும் தீமை நிகழ்ந்தால் அதை அவர்கள் பொறுமையுடன் சந்திக்கின்றனர். அதும் அவர்களுக்கு நன்கேயாகும். இது நம்பிக்கையாளர்களில் மட்டும் காணயியலும் விஷயமாகும். மற்று எவருக்கும் அதற்கு முடிந்துக் கொள்வதில்லை''.** (முஸ்லீம்)

நம்பிக்கையாளர்களின் இனங்களில் பல பதவிகளைக் கொண்டவர்கள் உண்டு என்பதை நினைவுக் கொள்ள வேண்டும். ரசூல் கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**''பலவீனமடைந்த ஒரு நம்பிக்கையாளரை விட அல்லாஹ்விடத்தில் மிக நல்ல முறையில் பந்தம் வைத்துக் கொள்ளவதும், மிக நேசத்துடன் இருப்பதும் சக்தி வாய்ந்த நம்பிக்கையாளராவார்''**

ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்விலும் அவன் விடுத்துள்ள கட்டளைகளிலும் நம்பிக்கைக் கொள்ளும் வரையில் அந்நபருக்கு ஒரு நம்பிக்கையாளராக நடந்துக் கொள்ளலாம் என்பது ஒரு உண்மையாகயிருந்தாலும் எல்லா நம்பிக்கையாளர்களும் அல்லாஹ் விடுத்துள்ள கட்டளைகளை நூறு சதவீதவும் கடைப்பிடித்துக் கொள்வதில் வெற்றியடைவதில்லை. நம்பிக்கைக் கொள்வதோடு அவர்களின் அந்த நம்பிக்கையை இழக்கச் செய்போர்களும் இருக்கின்றார்கள். நற்செயல்கள் செய்கின்றோம் என அவர்கள் எண்ணுவதோடு இறைவனின் அதிருப்தியினை ஈர்த்துக் கொள்ளுமளவிற்கான செயல்களும் செய்கின்றோம் என அவர்கள் உணர்ந்துக் கொள்வதில்லை. வேறு சிலரைக் காணலாம், அவர்கள் நற்செயல்கள் செய்கின்றனர். ஒரு பகுதி அல்லாஹ்விற்கும் மறுபகுதி மக்களின் முன் நல்லவர்கள் என காட்டிக் கொள்வதற்குமான வெளிப்படை முயற்சிகளில் ஈடுப்பட்டிருப்பார்கள். முடிவில் அவர்களின் செயல்கள் வீணாகின்றது. நற்செயல்களை முழுமைப் படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் அவர்கள் பிரகடனப்படுத்திக் கொண்ட பலவீனமே அதற்கு காரணம். மக்களில் சிலரைப் பார்க்கலாம், அவர்கள் கூறுவார்கள், நாங்கள் முஸ்லீம் என்றும் அல்லாஹ்விலும் அவன் நம்பிக்கைக் கொள்ள கூறிய அனைத்து விஷயங்களிலும் ஈமான் கொள்கின்றோம். என்றும்! (அதாவது அல்லாஹ்வின் மீதும், மலக்குகள் மீதும், நபிமார்களின் மீதும், இறை வேதங்கள் மீதும், இறுதி நாள் மீதும், மரணத்திற்கு பிறகு உள்ள நன்மை தீமைகளின் மீதும்) அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப முழுமையாக அவர்கள் அல்லாஹ்வில் தங்களை அற்பித்துக் கொள்ளாதவரையில் அவர்கள் இதில் வெற்றியடைவதில்லை. களங்கமற்ற இதயத்தோடு முழுமையான பக்தியுடன் தங்களை சமர்ப்பித்துக் கொள்ளாத காலம் வரையில், அல்லாஹ்வின் மீது எங்களுக்கு பக்தி உண்டு என்ற அவர்களின் பேச்சு வீணானதாகும். செயல் வடிவில் பிரதிப்பலித்துக் கொள்ளதா வரையில் நாவால் மட்டுமுள்ள பேச்சு அர்த்தமற்றதாகும். செயல் வழியாகவே தங்களின் இஸ்லாமை நிரூபிக்க வேண்டியது. இறை கட்டளைகளையாவும் செயல் படுத்திக் காட்ட வேண்டும். அது தற்பெருமை கூறிக்

கொள்வதாக இருக்கக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டும் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். அவன் திருப்தியும் அன்பும் அவர்கள் ஈர்த்துக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் விரும்புகின்ற வகையில் எவ்வாறு பிரார்த்தனைச் செய்ய வேண்டும் என்பதைக் குறித்தும் பிராத்தனைகள் மூலமாக சமர்ப்பிக்கின்ற மன்றாடுதலுகளுக்கு எவ்வாறு பதில் கிடைக்கின்றது என்பதைப் பற்றியும் குர் ஆன் மூலமாகவும் அவனது பிரிய தூதர் முஹமது (ஸல்) வழியாகவும் அல்லாஹ் கற்பித்திருக்கின்றான். பிராத்தனைகள் வழியாகவும் பிராத்தனைகளின் நிலைகள் மூலமாகவும் அல்லாஹ் ஒரு விஷயம் உறுதிப்படுத்துகின்றான். அதாவது மனிதனின் உதவியற்ற நிலையும் தன்னைப் படைத்தவனின் அதிகார நிலையும் அது மூலமாக வெளிப்படுத்துகின்றான். அது வழியாக அல்லாஹ் இல்லாமல் நான் இந்த பூமியில் தோன்றியிருக்க மாட்டேன் என அவர்கள் உணர்ந்துக் கொள்ளவும் செய்கின்றார்கள். அல்லாஹ் மண்ணிலிருந்து மனிதனைப் படைத்தான். அவனுக்கு வாழ்வதற்கான அனைத்து வகையும் வழங்கினான். ஆகவே மனிதன் நினைவுக் கொள்ள வேண்டும்! ஒரு நாள் அவர்கள் அல்லாஹ்விடத்தில் திரும்பச் செல்ல வேண்டும் என. மனிதன் வாழ்ந்துக் கொண்டும் செயல்ப்பட்டுக் கொண்டும் இருக்கும் இந்த பூமியில் அவனைப் புதைத்துக் கொள்வார்கள் அதனால் இப்பூமியில் அல்லாஹ்வின் அருள்களை நீங்கள் தேடிக் கொள்ளுங்கள் அல்லது வீணான செய்களில் ஈடுப்பட்டு உங்களின் நேரத்தை இழந்து விடுங்கள். அல்லாஹ் மக்களுக்கு அளித்துள்ள அருள் கொடைகளைக் குறித்து பெரும்பான்மை ஆள்களும் சிந்திப்பதில்லை என்பது ஓர் உண்மையாகும். சிறிதளவில் கூட நன்றி செலுத்தாத மக்களும் அவர்களில் இருக்கின்றார்கள். அவர்கள் இவ்வுலக வாழ்கையில் மூழ்கியிருகின்றார்கள். ஆனால் உண்மையான நம்பிக்கையாளர்கள் எப்பொழுதும் அல்லாஹ்வை நினைவுக் கூறுகின்றவர்களாகயிருப்பார்கள். ஒரு நாள் தங்களின் இரட்சகனிடத்தில் திரும்ப செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு, அல்லாஹ் அவர்களுக்காக வைத்துள்ள எல்கையினை அத்து மீறிக் கொள்ளாமல் அவர்களின் ஆற்றலுக்கும் அதிகாரத்திற்கும் உட்பெட்ட விஷயங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் செய்வார்கள். அவ்வகையாளர்கள் அல்லாஹ்விடமிருந்துள்ள அனைத்து சோதனைகளிலும் வெற்றியடைவார்கள். மட்டுமின்றி அல்லாஹ் அவர்களுக்கு விடுத்துள்ள அனைத்துக் கட்டளைகளையும் செயல் முறைப்படுத்திக் கொள்ள ஜக்கிரதையுடையவர்களாகயிருப்பதோடு, அல்லாஹ் அளித்துள்ள ஈமானை மிக பரிசுத்தமாக கண்டு கொண்டும் ஒரு முஸ்லிம் என்ற நிலையில் அதை நிலை நாட்டிக் கொண்டும், ஈமானுடன் செயல்ப் பட்டு ஆன்மீக வாழ்க்கைப் பெற்றுக் கொள்ளவும் செய்வார்கள். அது வழியாக அல்லாஹ்வின் திருப்தி எனும் வட்டாரத்திற்குள் நுழைந்து, என்றென்றும் நிலை நிற்கும் வாழ்க்கையின் பால் அவர்கள் பிரவேசித்துக் கொள்கின்றனர்.

உண்மையான நம்பிக்கையாளர்கள் அவர்களே என அல்லாஹ் இறுதியாக விதித்துக் கொள்வான். நாங்கள் நம்பிக்கையாளர்கள் என சுயமாக அவர்கள் கூறிக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் தங்களின் நம்பிக்கையின் அளவு எவ்வளவு என அல்லாஹ்வைத் தவிர்த்து மற்றெவருக்கும் தெரியயியலாது என்பதை அவர்கள் உணர்ந்துக் கொள்கின்றார்கள். மக்களின் நம்பிக்கையை இடைபோடுவதற்கான அதிகாரம் அல்லாஹ்விற்கு மட்டும் என அவர்கள் புரிந்துக் கொள்கின்றார்கள். அல்லாஹ்வின் வழிக்கும் அவனது தூதரின் போதனைக்கும் ஏற்றவாா் நம்பிக்கையினைப் பலப்படுத்திக் கொள்ள

வேண்டியது எவ்வகையில் என்பதை அவர்கள் உட் கொண்டிருப்பதால் பலவீனமான நம்பிக்கையில் இருந்து பலம் வாய்ந்த நம்பிக்கையின் பால் அவர்கள் சென்றடைவார்கள். அவ்வகையான ஆள்கள் ஒரு நிலையில் இருந்து வேறொரு நிலையில் ஏறிச் செல்கின்றார்கள். முடிவில் அவர்கள் அல்லாஹ்வின் அன்பையும் திருப்தியையும் எட்டி விடவும் செய்கின்றனர். என்ன நிகழ்ந்தாலும் சரி அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டும் அவர்கள் முயற்சித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக இந்த உலகம் திரும்பிக் கொண்டாலும் சரி, அவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தேடிக் கொள்வது அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே ஆகும். அவர்களுக்கு தெரியும் மக்களல்ல மாறாக அவர்களின் விதியாளன் அல்லது நீதிபதி அல்லாஹ்வே ஆவான் என. இந்த சிந்தனை, அவர்களுக்கு மிக அதிகமாக சுகம் அளிப்பதும் அவர்களின் இதயத்திற்கு குளிர்மை வழங்குவதும், அவர்களின் இதயத்தின் அமைதியினை பலப்படுத்துவதும், அவர்களின் அனைத்து விதமான ஐய்யப்பாடுகளை நீக்கிக் கொள்வதும் ஆகும். வாழ்க்கையில் வெற்றி அடைவதும் இவ்வகையான நம்பிக்கையாளரேயாகும். அவர்களுக்காகவே எல்லாம் வல்ல அல்லாஹ் திருமறை மூலமாக கீழ்காணும் வாக்குறுதி அளித்திருப்பது.

**“அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீ∴பாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீ∴பாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களது அச்சத்திற்கு பிறகு அதற்கு பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். அதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள்” (24-56)**

நம்மை நல்லவர்களாக விதித்திட நாம் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டியதாகும். அவன் அருள்களும் கருணைகளும் இல்லையென்றால் நாம் ஒன்றுமே அல்ல. துரதிர்ஷ்டத்தால் இங்கு சில ஆள்கள், வேறு சிலர்களுடைய ஈமானைக் குறித்து விதித்திடுவதற்கான அதிகாரம் கிடைத்திருப்பதைப் போன்று பருமாறிக் கொள்ளுகின்றனர். வரலாறு இந்த நூற்றாண்டில் மீண்டும் தொடர்கின்றது. அவர்கள் எண்ணுகின்றார்கள், மிக நல்ல முஸ்லீம்கள் அவர்களே அவர்கள் என. காரணம் அவர்கள் அனைத்து நபிமார்களையும் முஜத்தீதுகளையும் அங்கீகரித்துக் கொள்ளுகின்றார்கள். மட்டுமன்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஹா குலாம் அஹமது (அ) மையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இறை வெளிப்பாடுகளை அவர்களுக்கு எட்ட வைப்பதற்கும் இறையத்தாட்சிகளை அவர்களுக்கு தரிசிக்க வைப்பதற்குமாக அவர்களிலிருந்து அல்லாஹ் மற்றொரு மஸீஹை உயர்த்திக் கொண்ட பொழுது, துரதிர்ஷ்டத்தால் அவர்கள் இப்போது இதோ கடும் குணமுடையோர்களாக மாறுகின்றார்கள். பௌதீகமான பதவிகளை அவர்கள் இறுகப் பிடித்துக் கொள்ளுகின்றனர். மட்டுமல்ல மக்கள் அவர்களை வணங்கிக் கொள்வதும் தொடர்கின்றது.

**இவ்வகை ஆள்கள் அல்லது தலைவர்கள் இறை தூதர்களை போன்று பருமாறிக் கொள்கின்றார்கள். அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து எவ்விதச் செய்தியும் கிடைப்பதில்லை. மற்று நபிமார்கள் போதனைச் செய்தது போன்று போதித்துக் கொள்ள**

அவர்களை அல்லாஹ் நியமித்துக் கொண்டான் என அவர்கள் உரிமைக் கோருவதுமில்லை. அவர்களைத் தேர்ந்தெடுத்தது மக்களாகும். அதைக் குறித்து மக்கள் சிந்தித்துக் கொள்ள வேண்டும். மக்களின் குரல், அமீரின் குரல், ஆமிலா குழுவின் குரல், இறைவனின் குரலாகிடுமோ? என அவர்கள் யோசித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு கிடைத்துள்ள பௌதீகமான அதிகாரவும் அதிகாரத் தலையகவும் அவர்களின் கண்களை குருடாக்கி விட்டது. மக்கள் தங்களுடன் இருக்கின்றார்கள் என்பதால் கவலை பட வேண்டாம் என்றும் அவர்கள் பாதுகாப்பின் வாட்டாரத்திற்குள் இருக்கின்றார்கள் என்றும் அவர்கள் எண்ணுகின்றார்கள்.

ஆனால் நிச்சயமாக அல்லாஹ் இது வழியாக அவர்களை சோதித்துக் கொள்கின்றான். இவ்வகையான ஆள்களும் தலைவர்களும் மக்களுக்கு தவறான வழிகளைக் காட்டிக் கொள்கின்றார்கள். உண்மையினை மறைத்துக் கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றார்கள் உண்மையான இறைப் போதனைகளை மக்களிலிருந்து மறைந்துக் கொள்கின்ற அவ்வகை குற்றவாளிகளாகிய தலைவர்களுக்கு அல்லாஹ்வின் முன்னால் கடுமையான தண்டகைளுக்கு ஆளாகி கொள்ள வேண்டியதாக வரும். இந்த தண்டனை அவர்களுக்கு விண்ணுலகில் மட்டுமன்றி மண்ணுலகிலும் அனுபவித்துக் கொள்ள வேண்டியதாக வரும். அல்லாஹ் நியமித்துக் கொண்ட தூதர் யார் என மக்களுக்கு சந்தேகமில்லாத நிலையில் தெளிவான இறையத்தாட்சிகளுமாக அல்லாஹ்வின் உண்மையான தூதர் அவர்கள் முன்னால் நிற்கின்றார். றூஹில் குத்சின் பின் பலத்துடன் நிலைக் கொள்ளும் அல்லாஹ்வின் தூதரை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அல்லது மக்கள் தேர்நதெடுத்த மறைவான உண்மைகளை அறிந்துக் கொள்ள ஆற்றலில்லாத ஒருவரை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ! அவனது நேர் வழியினை பெற்றுக் கொள்வதற்கு தாகம் கொள்ளுகின்ற இதயங்களை அல்லாஹ் திறக்கச் செய்வானாக! உண்மையினை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களை ஆளாக்கிக் கொள்வானாக! அவர்கள் அதற்கு சாட்சிகளாக மாறட்டும்! உண்மை வெற்றியடைந்து விடும்! நயவாஞ்சகர்களும், இதய நோயாளிகளும், மக்களை தவறான வழிகளில் தூண்டிக் கொள்வோர்களும் அதை விரும்பாமல் போனால் கூட! இன்ஷா அல்லாஹ். ஆமீன்!


**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650

9789180817